



# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 4 டிசம்பர் 2003 கனி 1

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# ஆசிரியர் கடிதம்

10.12.2003

வாசகர்களுக்கு,

ஆதியும் அந்தமுமான ஆண்டவர் இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கடிதம் மூலம் உங்களை இவ்வருட இறுதிமாதத்தில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இப்பத்திரிக்கை வளர்ச்சிக்காக ஜெபிக்கிற மற்றும் உதவி செய்கிற யாவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழகத்தை "கிறிஸ்துவின் வசனத்தால்" நிறைக்க வேண்டும் என நானும் என் மனைவி குளோரியும் ஜெபித்து வருகின்றோம். அதில் குறிப்பாக மாவட்டங்கள்தோறும் நடைபெற்று வரும் வாசகர் கருத்தருங்கில் பல ஊழியர்கள் எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்துவருகிறார்கள். அவர்களை எங்களால் மறக்க இயலாது. ஒவ்வொரு மாதமும் சத்தியத்தை சத்தியமாகவும், சிறப்பாகவும் வெளியிட முயற்சிக்கிறோம். ஒரு பத்திரிக்கை அச்சாகி வெளிவர ரூபாய் ஐந்து செலவாகிறது. இதை மனதில் கொண்டு பத்திரிக்கையை கருத்துடன் வாசித்து மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள், வேத அறிவுப்போட்டியில் கலந்து கொள்ளுகிற உங்களை கர்த்தர் ஞானத்தினால் நிறைக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

யாவருக்கும் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர். புதிய வருடத்தில் கர்த்தர் புது பெலனை நம் அனைவருக்கும் கட்டளையிடுவராக! ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
உங்கள் ஆசிரியர்,
B. அர்ஜுனன்

**FOR FREE DISTRIBUTION**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15


**Published by**
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 4 டிசம்பர் 2003 கனி 1

ஆசிரியருரை

## நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்
## I'll Rejoice in the LORD



இவ்வருடத்தின் இறுதிமாதத்தில் இருக்கிற நாம் **நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்** என்று வாய்விட்டு சொல்லுவோம் அப்பொழுது கவலைகள் நம்மை விட்டுபோகும். ஜனவரி மாதத்திலிருந்து நீங்கள்எதிர்பார்த்தது கிடைக்காமலிருக்கலாம் அல்லது பல வருடங்களாக காத்திருந்து இதோ! புதிய வருடம் பிறக்கப்போகிறது இன்னும் நான் நினைத்தது நடக்கவில்லையே என்ற ஏக்கம் இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் நீங்கள் கர்த்தருக்குள் இருந்தால் மகிழ்ச்சியாயிருக்கலாம். *"மகிழச்சியாயிருப்பதும், உயிரோ டிருக்கையில் நன்மைசெய்வது மேயல்லாமல், வேறொரு நம்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்"* என (பிர. 3:12) ல் பிரசங்கி கூறுகிறான்.

மகிழ்ச்சி மனிதனுக்கு பல வகையில் வருகிறது. வேலை கிடைத்த மகிழ்ச்சி, பரிட்சையில் தேர்ச்சி பெற்ற மகிழ்ச்சி, விளையாட்டில் வெற்றிபெற்ற மகிழ்ச்சி, பணம் கிடைத்த மகிழ்ச்சி, திருமண மகிழ்ச்சி, குழந்தை பிறந்த மகிழ்ச்சி இப்படி மகிழ்ச்சி மனிதனை பல வகையில் மகிழச்செய்கிறது. இப்படிப்பட்ட மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம் எனவேதம் கூறுகிறது. *"நகைப்பிலும் மனதுக்குத் துக்கமுண்டு, அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்"* (நீதி . 14:12). ஆக இவ்விதமான மகிழ்ச்சியை அனுபவித்த மனுஷன் முடிவிலே சஞ்சலத்தோடு செல்கிறான்.

மகிழ்ச்சி மனிதனுக்கு பல வகையில் வந்தாலும் கர்த்தருக்குள் கிடைக்கும் மகிழ்ச்சி என்பது நிறைவானது. இந்த மகிழ்ச்சியை கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் அநுபவிக்கிறது. அது உலகப் பிரகாரமான ஆசீர்வாதமல்ல அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளை வியாமற்

போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்" (ஆபகூக் 3:17 19) ஒன்றுமே இல்லாமற்போனால் எங்கிருந்து வரும் மகிழ்ச்சி என்று நினைக்கிறீர்களா? இது கர்த்தருக்குள் வரும் மகிழ்ச்சி. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல மாற்றுகிறவர் கர்த்தர். அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற எந்த மனுஷனும் எது குறைவானாலும் அதைக்குறித்து கவலை கொள்ளாமல் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பான். "கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது" ( சங். 144:15).

இயேசுவின் நாட்களில் திரளான ஜனங்கள் மூன்று நாட்களாக அப்பம் புசியாமல் வனாந்தரமான இடத்திலே தங்கியிருந்து இயேசுவின் போதகத்தை கேட்டனர். ஆண்டவர் அவர்களை பட்டினியாய் அனுப்பிவிட மனதில்லை என்று சீஷர்களைப் பார்த்து சொன்னார். "அதற்கு அவருடைய சீஷர்கள் இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி கிடைக்கும் என்றார்கள். அதற்கு இயேசு: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள் ஏழு அப்பங்களும் சில சிறு மீன்களும் உண்டு என்றார்கள். அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளையிட்டு அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து,ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள் எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்;மீதியான துணிக்கைகளை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள், ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்" (மத். 15:33 38). சீஷர்களோ இந்த வனாந்தரத்தில் இவ்வளவு திரளான ஜனங்களுக்கு அப்பங்கள் எப்படி கிடைக்கும் என்றார்கள். கர்த்தரோ! அந்த ஜனங்களை அற்புதமாக போஷித்தார். அங்கு அப்பம் சுடப்படவில்லை, மீன் சமைக்கப்படவில்லை, ஆனாலும் போஷிக்கப்பட்டார்கள். கர்த்தர் நம்மை நேசிக்கிறவரும் போஷிக்கிறவருமாயிருக்கிறார். ஆதலால் கர்த்தருக்குள் இருக்கிறவர்கள் எதை இழந்தாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பார்கள், இதை ஒருவரும் எடுத்துப்போட முடியாது. கர்த்தர் அவர்களோடிருக்கிறார் அவர்கள் கர்த்தரோடிருக்கிறார்கள்.

"ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் " (யாக். 5:13). துன்பம் வரும்நேரத்தில் விசுவாச குறைவு ஏற்படும். தேவன் கைவிட்டு விட்டாரே என்ற கவலை உண்டாகும். யோபு என்ற தேவதாசனை நாம் அறிவோம்.

அவனுக்கு ஏழுகுமாரரும், மூன்று குமாரத்திகளும், ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமின்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். இவ்வளவு திரளான ஆஸ்தியுள்ள யோபுவின் வாழ்க்கையில் சோதனைக்காரன் வந்து யோபுவை சோதிக்க ஒரே நாளில் அவனுக்குள்ள எல்லாவற்றையும் பறித்துக்கொண்டான். யோபுவோ! **கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான் (யோபு 1:21).** இவை யெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை தேவனைப்பற்றி குறைசொல்லவுமில்லை, மாறாக ஜெபம் பண்ணினான் "கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார், யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குக் தந்தருளினார்" (யோபு. 42:10). இந்த யோபுவைப்போல துன்பம் வரும் வேளையில் ஜெபிக்கக்க கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் வாழ்க்கையை இன்பமாக மாற்றுவார்.

ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம்பாட வேண்டும். வேதாகமத்தில் சொல்லப்பட்ட தேவதாசர்களில் அதிக சந்தோஷமாக இருந்தவன் யாரென்றால் அவன் தாவீதாகத்தானிருக்க வேண்டும். அவனே அதிக பாடல்களை எழுதியுள்ளான். அவன் சொல்லி முடியாத மகிழ்ச்சியில் மூழ்கி இருந்தபடியால் இத்தனை சங்கீதங்களை பாடமுடிந்தது. "நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது " *(சங். 97:11)* ஆடுகளின் பின்னே சென்ற இந்த தாவீதை கர்த்தர் தமக்கு ஏற்ற தாசனாக தெரிந்து கொண்டார். செம்மையான இருதயத்தோடும், மகிழ்ச்சியோடும் கர்த்தரை துதித்து பாடினான். "மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும் " *(நீதி.15:13)*. மேல் நாட்டவர்களின் போட்டோக்களையும் நம் நாட்டவர்களின் போட்டோக்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! அவர்கள் எப்போதும் சிரித்த முகத்துடன் மகிழ்ச்சியாக காணப்படுவார்கள். நம் நாட்டவர்களின் போட்டோக்கள் பார்ப்பவர்களை முறைப்பது போலவும், பல்லை கடிப்பது போலவும் இருக்கும். "கர்த்தரை தேடுவர்களின் இருதயம் மகிழ்வதாக " *(சங்.105:3)* என்று தாவீது எழுதுகிறான். மேல் நாட்டவர்கள் கர்த்தரைத் தேடுகிறதில் கைதேர்ந்தவர்கள். வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்து அவருடைய விருப்பத்தையும் செய்கைகளையும் பூமியிலே நிறைவேற்றுகின்றனர் ஆதலால் அவர்களுடைய இருதயம் மகிழ்கிறது. வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுபோகும் என்பார்கள். வேதம், "மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்" *(நீதி.17:22)* என கூறுகிறது. மனமகிழ்ச்சி சிறப்பான மருந்தாகும் . கண்ட கண்ட மருந்துகளை உட்கொள்வதை விட வேதம் கூறுகிற விதத்தில் மனமகிழ்ச்சி கொள்ளுங்கள் அப்போது குணப்படுவீர்கள். கர்த்தரை ஆராதிக்கும்போது கடனுக்கு ஆராதிக்காமல் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் தேவனை ஆராதிக்க வேண்டும். குறிப்பாக சொல்லப் போனால் முந்தின நாளிலே

ஆயத்தப்படுவது மிகவும் நல்லது. பலர் ஞாயிற்றுகிழமை விடுமுறை என்று எண்ணி காலை 8 மணி வரை தூங்கிக்கொண்டு இருப்பார்கள். இன்று ஒருநாள் தான் விடுமுறை அந்த நாளிலும் ஏன் தான் இப்படி தொல்லை கொடுக்கிறார்களோ! என்று சலித்துக் கொள்ளுவர்ர்கள். ஞாயிற்று கிழமையை தேவன் ஓய்வுக்காக கொடுக்கவில்லை. அது கர்த்தருடைய நாள் அதிலே கர்த்தருடைய காரியங்களை நாம் சிறப்பாக செய்யவேண்டும். மற்ற ஆறு நாட்களும் நமக்கு கொடுக்கப்பட்டவை அதிலே நம் வேலைகளை பார்த்துக்கொள்ளலாம். தாவீது சொல்வதை இங்கு கவனியுங்கள் "மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள் "( சங். 100:2) கர்த்தர் நமக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறார்! அதையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்கும் போது நமக்கு மெய்யாகவே ஆனந்த சந்தோஷம் உண்டாகும். பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்கு போகும் பொழுது வாசலண்டையிலே தன் தாயின் வாயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன் அவர்களைப் பார்த்து பிச்சை கேட்டான்"அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினலே நீ எழுந்து நட என்று சொல்லி ; வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கி விட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்து எழுந்து நின்று நடந்தான்; நடந்து குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு, அவர்களுடனே கூட தேவலாயத்துக்குள் பிரவேசித்தான்" ( அப். 3:6 8). இந்த சப்பாணிக்கு கர்த்தர் செய்த காரியத்தை நினைத்து அவனுடைய மனது எத்தனை சந்தோஷமடைந்தது! நாமும் தேவனிடமிருந்து பெற்ற நன்மைகளை நினைத்து ஒவ்வொரு வாரமும் தேவனை ஆராதிக்க மகிழ்ச்சியோடும் ஆனந்த சத்தத்தோடும் அவர் சமூகத்திற்கு செல்ல வேண்டும்.


இச்செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரனே சகோதரியே உன்னுடைய மகிழ்ச்சி கர்த்தருக்குள்ளாகயிருக்கிறதா? அல்லது உலகப்பிரகாரமாகயிருக்கிறதா? "மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்க வேண்டும்; அவைகள் அநேகமாயிருக்கும்: வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே" (பிர. 11: 8) என வேதம் கூறுகிறது.மாயையான மகிழ்ச்சிக்கு அடிபணிந்து மாறாத ஆண்டவரை தெரிந்து கொள்ளாமலும் அவருக்குள் இருக்கின்ற மகிழ்ச்சியை அநுபவிக்காமலும், போனால் பயன் என்ன? "வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும் , உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி" (பிர. 11:9). ஆளில்லாத தோட்டத்தின் வழியாக கடந்து செல்லுகிறவன் பழுத்த பழங்களைக் கண்டு இச்சித்து பறித்துக்கொண்டு பின்பு சந்தோஷப் படுவான். காவலாளியைக் கண்டவுடன் அவன் படும் பயத்திற்கு

அளவே இருக்காது. அதைப்போல எப்படி வேண்டுமானாலும் வாழலாம். ஆனால் தேவன் "தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுக்கிறரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கை பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்" (பிர.5:19). உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப் படும் , பரிபூரணமும் அடைவான், இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். தேவன் அவனவனுக்கு பகிர்ந்தளித்தது எப்படியோ அப்படியே நடக்கும். இது தேவனுடைய அநுக்கிரகம் .

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததில்லை. இதிலிந்து நாம் ஒன்றும் கொண்டு போவதில்லை என்பது நிச்சயம். ஆத்துமா தன்னை தந்த தேவனிடத்திற்கே திரும்பும். இந்த ஆத்துமா கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவரில் மகிழ்ச்சியாக இருக்கும்போது மெய்யான சந்தோஷம் மற்றும் சமாதானம் அடையும். "நீதிமான்களின் நம்பிக்கை மகிழ்ச்சியாகும்" ( நீதி. 10:28). இந்த மகிழ்ச்சியை கர்த்தருக்குள் பெற்று "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமா யிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் " ( பிலி. 4: 4) .

## மனிதன் 2002 ல் என்ன நடக்கும் என அறிய ஆவலுடனிருந்தான்

*(Man wondered what would happen in 2002)* J.C. CHOATE



20ம் நூற்றாண்டு முடிவதற்கு சில மாதங்களுக்கு முன்பாக பலர் என்ன நடைபெறப்போகிறது என அறிவதில் அக்கரையுள்ளவர்களாக இருந்தனர். அதிகமான ஜனங்கள் மிகுந்த வியாகுலத்தோடு 2000 மாவது ஆண்டை எதிர்நோக்கியிருப்பவர்களாகக் காணபட்டனர். இது நாம் வரலாற்றின் ஒரு பெரிய யுகத்தை முடித்து இன்னொரு யுகத்தை நாம் தொடக்குகின்றவர்களாக இருப்பது போல இருந்தது. அரசியலிலும் கூட, மனிதர்கள் தங்களுடைய தேசத்தை 21ம் நூற்றாண்டுக்குள் தலைமை தாங்கி நடத்தும் பதவிக்காக போராடினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, 20ம் நூற்றாண்டின் தொடக்கமும் உலகெங்குமுள்ள சமயக் குழுக்களுக்கு மிக முக்கியமான ஒரு நிகழச்சியாக காணப்பட்டது.

உண்மையாகவே, இது இப்படி நேரிட்டிருக்கையில் நூற்றாண்டு மற்றும் இயேசு இவ்வுலகை ஆண்டதாகக் கருதப்படும் ஆயிரம் ஆண்டு காலம் முடிவுற்ற எந்த ஆண்டு மற்றும் துவங்கிய இன்னொரு ஆண்டைக்

காட்டிலும் எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டதாக இருக்கவில்லை, குறிப்பாக கர்த்தரோடு இது பற்றி என்ன பெரிய வேறுபாடு இருக்கும்? பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்" (2 பேதுரு 3:8) என பேதுரு கூறியதை நினையுங்கள்.

2000 மாவது வருடத்தைப் பற்றிய விவகாரம் வரையில், கார்த்தருடைய பார்வையில் உலகம் உண்டானதிலிருந்து அனைத்து ஆண்டுகளைப் பற்றிய மனிதனுடைய கணக்கு சரியானதாக இருந்திருக்கிறது என நாம் எப்படி அறிந்தோம்? இந்தக் கணக்கு அல்லது இரண்டு அல்லது நூறு அல்லது அதற்கு மேல், ஒரு வழி அல்லது இன்னொரு வழியினால் முடிவடைந்திருக்கக் கூடும்! ஆனால் எண்ணிக்கை இருந்தாலும் கூட, அந்தச் செயல் எந்த வேறுபாட்டை ஏற்படுத்தும்? ஒரு நாள் என்பது ஒரு நாளே, மற்றும் ஒரு வருடம் என்பது ஒரு வருடமே மேலும் காலச்சக்கரம் முழுவதிலும், 2000 மாவது ஆண்டு மற்றொரு ஆண்டைக் காட்டிலும் வித்தியாசமானதாகக் காணப்படவில்லை.

பலர் 2000 மாவது ஆண்டை வரவேற்கும் படிக்கு எருசலேமிலிருக்க விரும்பினார்கள். அவர்கள் ஏதோ விசேஷித்த நிகழ்ச்சி அங்கு நடக்கும் என நினைத்தார்கள். சிலர் கர்த்தர் எருசலேம் நகரத்தில் ஆயிரம் வருடம் ஆளுகையை தொடங்கும்படிக்கு வருவார் என உறுதியுடனிருந்தனர். வரப்போவதொன்றைக் குறித்து முன்கூட்டியறியச் செய்யும் தீவிரமான எல்லா சிந்தனையும் மற்றும் மனதில் ஏற்பட்ட ஊகத்தின் தீர்வு என்னவென்றால் கிறிஸ்து அந்த நாழிகையில் அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட தேதியில் வருவதற்கு வாக்குப் பண்ணவில்லை! மாறாக, அவர், "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" ( மத். 24 : 36) என கூறியிருந்தார். இப்போது, கிறிஸ்து எப்போது வருவார் என்பதை பிதா ஒருவர் மாத்திரம் அறிந்திருக்கிற போது, எவ்வாறு உங்களுக்கும் அல்லது எனக்கும் அல்லது வேறொருவருக்கும் அந்த நாளை ஊகித்துப் பார்க்க இயலக் கூடியதாக இருக்கும்? மேலும் கிறிஸ்து 2000மாவது ஆண்டில் மீண்டும் வருவார் என்று நமக்கும் உறுதியாக நினைத்துக் கொள்ள எவ்வாறு இயலும்? அவர் அந்த நாளுக்கு முன்பு அல்லது அந்த நாளுக்குப் பின்பு வர இயலும், ஆனால் ஒரு மனிதனும் அதன் எவ்வழியையும் அறிந்திருக்கமாட்டான். இப்படிப்பட்ட காரியம் தேவனுடைய கரங்களில் உள்ளது. மேலும் நாம் அவைகளை அவ்விடமே விட்டு விட வேண்டும்.

கர்த்தர் நீதியுள்ள 1000 வருட ஆட்சி செய்யும்படிக்கு எருசலேமுக்கு மீண்டும் வருகிறார் என்பதைப் பற்றிய வினாவானது பரிகாசத்திற்குரியதாகும். வேதாகமம் எவ்விடத்திலும் இவ்வாறான கோட்பாட்டினை போதிக்கிறதில்லை. இயேசு மீண்டும் பூமிக்கு ஏன்


வரப்போகிறார்? அவர் ஒரு முறை பூமிக்கு வந்து, புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அவர் ஏன் மீண்டும் வரவேண்டும்? வருவதற்கான நோக்கம் என்ன? கிறிஸ்து பரலோகத்திலுள்ள பிதாவினிடத்திற்கு எழுந்தருளிப் போனபோது, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் என்பதாக வேதம் கூறுகிறது *( அப். 1:11)* . அவர்கள் அவர் எப்போதவது வந்து மீண்டும் பூமியின் மேல் ஆளுகையை நிலைநாட்டுவார் என்று சொல்லவில்லை. குறிப்பாக பவுல், கர்த்தர் வரும்போதும், **நாம் அவரை சந்திக்கும்படி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்!** என்று குறிப்பிட்டிருக்கிறார் *( 1 தெச. 4:16,17)*. இது "பரவசத்தில்" அல்லது எருசலேமில் ஒரு மாம்ச பிரகாரமான ராஜ்யத்தில் ஆயிரவருட ஆட்சியில் நம்பிக்கையுள்ளவர்களால் வர்ணிக்கப்பட்ட ஒரு காட்சியல்ல! ஆனால் யார் வேத ஆவியினால் பேசினார்கள், பவுல் அல்லது தற்கால பிரிவினைக்கார போதகர்கள்?

இத்தோடு கூட பலர் "Y2K" *(2000 மாவது ஆண்டு)* யின் மேல் செய்யும்படிக்கு ஒரு பெரிய பிரச்சனையை உருவாக்கி, அனைத்து கம்ப்யூட்டர்களும் செயலிழந்து போகும். மேலும் உலகில் ஒவ்வொரு இயந்திர சாதனத்தின் மூலம் தேவையான பாதுகாக்கப்பட்ட விஷயங்கள் எல்லாம் ஸ்தம்பித்துவிடும் என்ற பயத்தை உருவாக்கி கொண்டிருந்தார்கள் நாம் கம்ப்யூட்டர் பிரச்சனைகள் சரியாக பழைய ஒழுங்கு நிலைக்கு மீண்டும் திரும்பும் வரை 2000மாவது ஆண்டு தொடகத்திற்கென தண்ணீரையும், உணவையும், பணத்தையும் சேமித்து வைக்கும்படி ஊக்குவிக்கப்பட்டோம். சிலர் அந்த நாளை பற்றி எதிர் பார்த்திருந்த விபரீதம் ஏற்கனவே சரியாக்கப்பட்டன எனக் கூறி, அந்த பயத்தினை போக்கினார்கள்.

எப்படியாயினும், 21 ம் நூற்றாண்டின் முக்கியகாரியம், என்ன வென்றால் காலம் நிறைவேறும் முன்னே, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்படையும்படிக்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும், அவரிடத்தில் நம்பிக்கையுடனிருப்பதுமே ஆகும். அப்போது தான் அவர் மீண்டும் வரும்போது அவரை சந்திக்க நாம் ஆயத்தமாயிருப்போம்..... அந்த நாழிகை எப்போதாகவும் இருக்கலாம். *(எபிரெயர் 11:6; யோவான் 14: 1 3; மாற்கு 16:16; அப். 2:38 47; வெளி.2:10).*

**சீர்தூக்கிப்பார்**

*கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார் (நீதிமொழிகள் 16:2)*



*"மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"*
*(1 கொரிந்தியர் 9 : 27)*

# நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன்
# I will just Follow the Religion of my Parents

**Betty Burton Choate**

இன்று உலகில் வேறுபட்ட மதங்களை கிறிஸ்தவ சமயம், யூதசமயம், இந்துமதம், புத்தமதம், இஸ்லாமிய மதம், டாவோயிசம், ஜொராஸ்டரேனிசம், கத்தோலிக்க சமயம், பிராட்டஸ்டண்டு என காண்கின்ற வேளையில் இவற்றில் எதைப் பின்பற்றுவது என்ற எண்ணம் முழுவதும் நசுக்கப் படுகின்றது. ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு தெய்வங்களை, வெவ்வேறு மத சாஸ்திரங்களை, வேறுபட்ட ஆராதனை முறைமைகளை, ஒருவனுடைய வாழ்வின் பாவ பரிகாரத்திற்கு வேறுபட்ட வழிகளைக் காட்டுகிறது. எவ்வாறு ஒரு மனிதன் எந்த சமயம் தேவனிடத்திலிருந்து வந்தது, எது சத்தியத்தை மறைத்து வைப்பதற்கு சாத்தானால் உருவாக்கப்பட்ட போலியானது என்பதை அறிய முடியும்?



இந்த குழப்பமான கேள்விகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் படிக்கு, அதிகமான ஜனங்கள் “நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன். அவர்களுக்கு எவையெல்லாம் நல்லதாகயிருந்ததோ அவைகள் எனக்கும் நல்லதாகவேயிருக்கும்” எனத் தீர்மானிக்கின்றனர்.

ஆனால், ஒருவருடைய பெற்றோர் பின்பற்றுகின்ற ஏதோ ஒன்றோடு திருப்தியாயிருக்க அது பாதுகாப்பானதா? சத்தியத்தை ஒரு போதும் ஆராய்ந்து பார்க்காதபடிக்கு அவர்களுடைய பெற்றோர் மற்றும் பெற்றோருடைய பெற்றோர் பின்பற்றினவைகளையும் கூட பின்பற்றுவது தவறானதாக இருக்காதா?

ஆபிரகாமுடைய தகப்பனும் அவனுடைய தாத்தாவும் விக்கிரகாராதனை செய்தார்கள் என வேதாகமத்தில் நாம் காண்கிறோம், ஆனால் ஆபிரகாம் பரலோகத்தின் தேவனை ஆராதித்து சேவிக்கும்படிக்கு குடும்ப சமய சடங்குகளை விட்டு விலகினான் (யோசு.24:2). இன்னொரு எடுத்துக்காட்டு, அப்போஸ்தலனாகிய பவுலும் கூட விலகினான். அவன் அப்போஸ்தலர் 23:1ல் “சகோதாரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்” மேலும் மெய்யாகவே, நானும் நசரேயனாகிய, இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் (அப்.26:9) என்றான். ஆனால், அவன் தன்னுடைய பிதாக்களின் மார்க்கம் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவராகிய மேசியாவாகிய கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தி வந்தது என்று கற்றுக்கொண்ட போது, அவன் யூத சமயத்தை விட்டு விலகி கிறிஸ்தவனாக மாறினான்.

நீதிமொழிகள் 14:12 ஆனாலும், மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என்று எச்சரிக்கிறது. நாம் ஒவ்வொரும் தனித்தனியான ஆத்மாவாகவும், நாம் வாழும் வாழ்க்கை முறைக்கு தேவனுக்கு உத்தரவாதியாகவும் இருக்கிறோம். அநேகர் வீணாக சில மத அமைப்புகளைப் பின்பற்றும் படிக்கு, அந்த நம்பிக்கைக்குள்ளாக தங்களை தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற போது இது போதுமானதல்ல. இயேசு நியாயத் தீர்ப்பின் நாளிலே, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத்துரத்தினோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" என்றார். அடுத்த வசனம் ...நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ..." என்ற கூற்றுடன் ஆரம்பிக்கிறது.

நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம், " வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16,17) என போதிக்கப் பட்டிருக்கிறோம்.

ஏனென்றால் வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக் கிறது. மேலும் இது தேவபக்திக்கடுத்த எல்லா விஷயங்களிலும் நம்மை வழிநடத்த உத்தேசிக்கிறது, நாம் உந்தப்படுகிறோம், நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"(2 தீமோ.2:15).

இப்பகுதிகளிலிருந்து, நாம் நம்முடைய முற்பிதாக்களின் சமயத்தை குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதற்கு இடம்கொடுக்கக் கூடாது எனக் காண்கிறோம். ஏனென்றால், அவர்கள் ஒருவேளை தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைக்கூட பின்பற்றிக்கொண்டிருந்திருக்கலாம். மாறாக, நாம் நம்முடைய ஆத்தும நன்மைக்காகவே போதுமான சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய மாதிரியின் மூலம் நம்முடைய சந்ததியின் ஆத்துமாக்களும் பல்வகைப்பட்ட சமயங்களையும்

புனிதநூல்களையும் நமக்காக படிப்பதற்கு முற்படுவார்கள். நாம் சத்தியத்தை தேடவேண்டும், அதைக்கண்டுபிடிக்கும்போது, குடும்பப் பாரம்பரியங்களையும் மத நம்பிக்கைகளையும் விட்டு விலக வேண்டியிருந்தாலும் கூட சத்தியத்தைப் பின்பற்றும்படிக்கு தைரியம் கொண்டிருப்போம்.

இயேசு சத்தியத்தை தேடுவது சம்பந்தமாக இந்த உவமையைக் கூறினார்:''...பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது, அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத்.13:45,46). இந்த மனிதன் விலையுயர்ந்த முத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்படிக்கு தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டான் . சத்தியம் முத்தைக் காட்டிலும் விலையுயர்ந்தது, மேலும் நாம் நமக்காக சமய சத்தியத்தைக் கொள்ளும்படிக்கு எதையும் இழக்கவும் தேவையான எந்த மாற்றத்தையும் உருவாக்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நம்முடைய பெற்றொர்கள் நம்பி பின்பற்றின சமயம் அவர்களுடைய சுய அறிவுக்கேற்றபடியும் சந்தர்ப்பத்திற்கேற்றபடியும் காணப் பட்டது. ஒருவேளை அவர்கள் சரியாக இருந்திருக்கலாம் ஆனால், அவர்கள் தவறானதைத் தெரிந்து கொண்டார்கள், நாம், தனித்த ஆத்துமாக்களாக, நமக்கு முன்பாக கண்மூடித்தனமாகப் பின்பற்றும் படிக்கு இடங்கொடுக்க முடியாது.உண்மையான உறுதியான ஆராய்ச்சி யோடு, தேவனுடைய சத்தியத்தைக் கண்டுகொள்ளும்படிக்கு தேவனு டைய உதவிக்காக ஜெபத்துடன் இணைந்து, நாம் தவறானவற்றிலிருந்து சத்தியத்தை பகுத்துணர்ந்து கொள்ள முடியும். தேவனை நோக்கி நமக்காகவும், எல்லாவற்றிற்கும் மேலாக சத்தியத்திற்கு அர்ப்பணிக்கும் படிக்கு இது நம்முடைய கடமையாயிருக்கிறது.

நீங்கள் இது தேவனுடைய சத்தியம் என உறுதிசெய்து கொள்ளு வதற்கு ஆராய்ந்து பார்க்காமலே உங்களுடைய பெற்றோரின் சமயத்தைப் பின்பற்றுவதுடன் திருப்தியடைய தீர்மானித்திருப்பீர்களானால், உங்களுடைய ஆத்துமாவின் நித்திய நன்மையை இழந்து கொண்டிருக் கிறீர்கள். திரும்பிச் சென்று மீண்டும் இந்த ஐயப்பாட்டினை மறு ஆய்வு செய்யுங்கள். சத்தியத்தின் மூலம் ஞானபெற்ற சரியான நிலையை உருவாக்குங்கள்.



தமிழில் : J. குளோரி அர்ஜுனன்

# பயப்படாதே - Fear Not

-J. குளோரி அர்ஜுனன்



புதிய ஆண்டு எவ்வாறு இருக்குமோ? பழைய ஆண்டின் வருத்தங்களும், சஞ்சலங்களும் தொடருமோ என பயந்து, புதிய ஆண்டில் தேவ ஆசீர்வாதம் கிடைக்காதோ என ஏங்கிக் காத்திருக்கும் சகோதரிகளே பயப்படாதீர்கள்.

கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் சகோதரிகள் பயப்படத் தேவையில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தன் தன் வேலைகளை தேவசித்தத்தின்படி தவறாமல் செய்து கொண்டிருக்கப்பண்ணுகின்ற தேவன் உங்களையும் என்னையும் வழிநடத்துவது அதிக நிச்சயமல்லவா? ஆபிரகாம் கர்த்தரை விசுவாசிக்கிற அனைவருக்கும் தகப்பன் அவனை அருமையாக நடத்தின தேவன் அவன் விசுவாசித்த வண்ணமாய், விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமே நடத்த வல்லவர். புத்தாண்டுக்குள் நுழைய இருக்கிற நாம் நம்மை சீர்தூக்கிப் பார்த்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருப்போமாக!

ஆபிரகாமை நோக்கி, ...நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார் *(ஆதி.15:1)*. இவ்விதமான வாக்குத்தத்தினை பெற அவனிடம் இருந்தது விசுவாசமட்டு மல்ல, நற்கிரியையும்கூட. ஆம், ஆதி.*14:22*ல் சோதோம் ராஜாவை பார்த்து அவன் கூறியதை கவனியுங்கள். "...நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்" என்றான். அப்படியென்றால், இவன் பிறனுக்குள்ள எதையும் இச்சிக்கவில்லை என்றுதானே பொருள். அன்பு சகோதரிகளே,ஸ்திரீகளாகிய நாம் இவ்விஷயத்தில் பெலவீனர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நமது ஆதித்தாய் ஏவாளிடம் இச்சிக்கிற குணமிருந்ததே. நாமும்கூட அநேக நேரங்களில் நவநாகரிக உலகின் பொருட்களையோ, அல்லது பிறருக்குள்ள ஏதோ சிலவற்றை இச்சித்து இப்பொருள் நமக்கிருந்தால் நன்றாக இருக்கும் எனயோசிக்க ஆரம்பித்து விடுகிறோம். பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருங்கள் என்ற கட்டளையை மறக்கக் கூடாது. அது பொருட்களாயிருந்தாலும் சரி, வேறு எதுவாயிருந்தாலும் சரி. இச்சையை தவிர்க்கும் போது நம் தேவன் நமக்கு கேடகமும், மகா பெரிய பெலனுமாயிருபார் என்பது அதிக நிச்சயம்.

ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவனுமல்லவா! ஈசாக்குக்கு கர்த்தர் தரிசனமாகி "...பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசிர்வதித்து, உன் சந்ததியைப் பெருகபண்ணுவேன் என்றார்" (ஆதி.26:24). ஈசாக்கு இவ்வாசீர்வாத வாக்குத்தத்தை எச்சூழலில் பெற்றான்? இவனுடைய வேலைக்காரருக்கும் கேராரூர் மேய்ப்பருக்கும் இடையே துரவு வெட்டின விஷயத்தில் பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. ஈசாக்கோ வாக்குவாதம் பண்ணாதபடி அவ்விடத்தைவிட்டு பெயர்ந்து வேறொரு இடத்திற்கு சென்றபோது கர்த்தர் அவனுக்கு தரிசனத்தில் இந்த ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணினார். அநேக சமயங்களில் தேவனை அறியாத சிலரோடு நாமும் வாக்குவாதம் பண்ணவேண்டியசூழ்நிலை உருவாகிவிடுகின்றது .வேதம் 'வாக்குவாதம் எழும்பும் முன் அதை விட்டு விடு ' என்று கூறுகிறது. ஆம், நாமும் இவ்விதமாக அதை விட்டு விலகும்போது நம்மைஆசீர்வதித்து நம் சந்ததியைப் பெருகப்பண்ணுவார். எனவே அன்பு சகோதரிகளே, கர்த்தரை அறிந்துள்ள நாம் மற்றவர்களோடு வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்போமாக!

யோசுவாவை பார்த்து மோசே, கர்த்தர்தாமே உனக்கு முன் பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம். என கர்த்தருக்குள் திடப்படுத்தினான். சகோதரி களே, நம்மை எப்போதும் கலங்கப் பண்ணுகிறவன் பிசாசு தான். நம்முடைய வாழ்வில் எத்தனையோ கோணங்களில் பிசாசு நம்மைக் கலங்கப்பண்ணுகிறவனாய் இருக்கிறான் என அங்கலாயிக்கிறீர்களா? வேதம், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் எனக் கூறுகிறது. ஆம், நாம் தைரியமாய் நின்று பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். உலகின் எக்காரியமும் நம்மை மேற்கொள்ளவிடாது எதிர்த்து நிற்போமானால் நிச்சயமாய் பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசு கொண்டுவருகிறதான சோதனைகளைக் கண்டு நாம் பயப்படவேண்டாம், யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோல் நமக்குள்ளும் புகுந்துவிட இடமளிக்காமல் கர்த்தருடைய ஆவியான வருக்கு இடமளிக்கும் போது நிச்சயமாய் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சத்துருவாகிய பிசாசை ஜெயித்து பரம கானானுக்குள் பிரவேசிப்போம்.

இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள், இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்து பயத்துடன் காணப்பட்டனர் (லூக்.24 : 15). ஏன் தெரிமா? மாம்ச சிந்தையினால் இயேசுவை மரித்தோரிடத்தில் தேடினதால் பயப்பட்டார்கள் அன்பான சகோதரிகளே, இன்று நீங்கள் இயேசுவை மாம்ச பிரகாரமாகவே எண்ணிக்கொண்டு இருக்கிறீர்களா?

இயேசுவை மரித்தோரிடத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அவர் அப்போஸ்தர்களைப் பார்த்து உங்களை திக்கற்றவர்களாய் விடேன் உங்களிடத்தில் வருவேன் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு தருவேன் என்று கூறினாரே. அவ்வாறு இருக்க, நம்மை தேற்றி ஆற்றி இம்மானுவேலனாக நம்மோடு கர்த்தர் இருக்கும்போது நாம் உலக காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம்.


கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின் போது, தேவதூதன் **பயப்படாதிருங்கள்** எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ( லூக்கா 2:10) என்றான். ஆம் **இயேசுவின் பிறப்பு நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் நற்செய்தி , இயேசுவின் மரணம் நமக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை உண்டாக்கும் மீட்பின் செய்தி, இயேசுவின் பரமேறிய சம்பவம் நம்மை தேற்றும்படிக்கு தேற்றரவாளனை அனுப்பிய ஆறுதலின் செய்தி, இயேசுவின் இரண்டாம் வருகை நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நித்திய செய்தி.** பாருங்கள், இயேசுவினிடத்தில் எத்தனை இன்பமுண்டு! அவரிடம் நாம் அன்பு கொண்டிருப்போமானால் வரும் நாட்களைக் குறித்த பயம் நம்மை வாட்டாது. "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்மே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படு கிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" என யோவான் 4:18 மிக அழகாய் கூறுகின்றார்.

அன்பான சகோதரிகளே; பயப்படாதேயுங்கள் நம்முடைய உள்ளத்தில் பயமிருக்குமானால் நிச்சயமாவே நாம் இயேசுவினிடத்தில் பூரண அன்பு கொண்டிருக்கவில்லை என்று தான் பொருள். வருகின்ற ஆண்டிலிருந்தாவது நம்மை சீர்தூக்கிப்பார்த்து கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று வேதாகமத்தின் உதவியுடன் அறிந்து பயத்தை புறம்பே தள்ளி,ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்போம் "நீ பயப்படாதே, நான் உன்னுடைனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்."(ஏசா 41:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடையவர்களாயிருந்து வரும் புத்தாண்டில் கர்த்தரின் அசீர்வாதத்தை பெறுவோமாக!

## பொது அறிவுக் களஞ்சியம்

- பிறந்தது முதல் இறப்பது வரை பல்லி தண்ணீரே குடிப்பதில்லை.
- தலைமுடி ஒரு வருடத்தில் 40 செ.மீட்டர் வரை வளருகிறது.
- உலக மக்களால் அதிகமாக உச்சரிக்கப்படும் வார்த்தை "ஓ.கே."
- எறும்புக்கு மொத்தம் 5 மூக்குகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியை செய்கின்றன.
- சாலமன் என்ற மீன்,நீர் ஓடும் திசையில் நீந்தும்போது பின்புறமாக நீந்தும்.

சிறுவர் பகுதி



# மன்னித்தல்

வேதபகுதி : மத்தேயு 18:23 35

ஆண்டவராகிய இயேசு சீஷர்களை பார்த்து பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்று ஒரு உவமையை சொன்னார். அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள். அவனுக்கோ கடனைத் தீர்க்க வழியில்லை. அவனுடைய ஆண்டவன் அவனை என்ன சொன்னான் தெரியுமா? அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும் பின்னும் அவனுக்குள்ள யாவையும் விற்று கடனைத் தீர்க்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழவிழுந்து வணங்கி; ஆண்டவனே! பொறுமையாயிரும், எல்லா வற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று வேண்டிக் கொண்டான்.

அவனுடைய தாழ்மையான வேண்டுதலை பார்த்த அவனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுவித்து தனக்கு செலுத்தவேண்டிய கடனை மன்னித்து விட்டான். அவனோ புறப்பட்டுபோகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்த உடன் வேலைக் காரனைக் கண்டு, அவன் தொண்டையை நெறித்து தான் கொடுத்த கடனை கொடுக்கும்படியாக கேட்டான். அந்த உடன் வேலைக்காரன் அவன் காலில் விழுந்து பொறுமையாயிருங்கள் எல்லாவற்றையும் விற்று நான் பட்ட கடனை தீர்க்கிறேன் என்றான். அதற்கு அவனோ சம்மதியாமல் கடனை தீர்க்குமளவும் அவனை காவலில் போட்டான். இந்த சம்பவத்தை கண்ட உடன் வேலைக்காரர்கள் துக்கப்பட்டு அதை அவனுடைய ஆண்டவனுக்கு அறிவித்தார்கள். உடனே அவன் அவனை அழைத்து பொல்லாத ஊழியக்காரனே நீ பட்ட கடனை நான் உனக்கு மன்னித்துவிட்டேனே அதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு மன்னிக்க வேண்டாமா? என்று சொல்லி அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து அவன் பட்ட கடனை தீர்க்குமளவும் உபாதிக்கிறவர் களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

அன்பான தம்பி, தங்கைகளே! ஆண்டவர் நமக்கு தருகிற போதனை என்னவென்றால் நாமும் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், நம் பரம பிதாவும் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்கமாட்டார். நீங்களும் உங்கள் பள்ளியில் படிக்கின்ற ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் மன்னிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மன்னீப்பீர்களா?

| | |
|---|---|
| **மனப்பாட வசனம்** | "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத்தேயு 6:14) |

# நித்திய ஐசுவரியம்

L. மனாசே மண்ணு

கிறிஸ்துவுக்குள் வாசகர் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் நல் வாழ்த்துக்கள். இன்றைய உலகத்தில் பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை. அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகம் (பரலோகம்) இல்லை" என்று சொல்லுகிறபடி அநேகர் சுக வாழ்க்கைக்காக தனக்கு ஐசுவரியங்களை சம்பாதிக்க முயற்சி செய்கின்றனர்.

சிலருடைய ஜெபமும் தங்கள் சரீர தேவைகளை குறித்ததாகவே இருக்கும். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் (1 தீமோ 6:9). என் அருமை சகோதரனே, சகோதரியே இந்த வசனத்தை நாம் வாசிக்கையில் என் மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது. ஏன் என்றால், இவ்வுலக வாழ்க்கைக்காக ஐசுவரியவான்களாக வாழ விரும்பும் போது பலவிதமான சோதனையில் வீழ்ந்து அதிலே அமிழ்ந்து போகிறோம். மீண்டும் அதில் இருந்து எழுந்து விசுவாசத்தில் நாம் நிலைத்திருக்க கூடாத காரியமாக இருக்கிறது. ஆகையால் தான் நமது ஆண்டவர் இயேசு. ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது. திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியாயிருப்பீர்கள் இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள். (லூக்கா 6:24 25) என்றார்.

ஐசுவரியவான்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வருவது மிகமிக கடினம். ஏன் என்றால், அவன் ஐசுவரியம் அவன் கண்களையும் புத்தி யையும் மூடிப்போடுகிறது. இதை வாசிக்கும் வாசகரே , உங்கள் உலக ஐசுவரியம் உங்களை கடைசி வரை காப்பாற்றாது. அதனால் நீங்கள் திருப்தி அடைவதும் கிடையாது. ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப் படாதே, சுயபுத்தியை சாராதே"(நீதி 23;4). உம்முடைய பிரயாசம் ஐசுவரியவானாக மாற வேண்டும் என்பதாக இருந்தால் தயவு செய்து இன்றே உன் மனத்தை மாற்றிக்கொள், வேதமும் அதை விரும்பாதே என்று கூறுகிறது. உலக ஐசுவரியம் ஒரு மனிதனை பாவம் செய்யத்தூண்டும், இந்த ஐசுவரியத்தினால் பெருமை, மதியீனம், கீழ்படியாமை, அநீதி செயல்கள் போன்றவைகளைச் செய்ய நம்மை தூண்டும் .இந்த சரீர பிரகாரமான உலக ஐசுவரியங்களை சம்பாதிப்பதை தவிர்த்து, தேவன் கொடுக்கும் நித்திய ஐசுவரியமான தேவ கிருபையை நாடுங்கள் அப்பொழுது உலகம் கொடுக்க முடியாத "சந்தோஷம்" என்கிற ஐசுவரியத்தை கொடுப்பார் .கிறிஸ்துவுக்குள் நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால் நமக்கு பரிபூரண ஆசிர்வாதங்களை கொடுப்பது அதிக நிச்சயம்( நீதி 28:20).

லாசரு, ஐசுவரியவான் சம்பவத்தில் இந்த உலகத்தில் லாசரு தரித்திரன், பரலோகத்தில் ஐசுவரியவான். பூமியில் ஐசுவரிய வானாய் இருந்தவனோ நரகத்தில் தரித்திரவானாய் இருந்து தண்ணீர் கேட்கிறவனாய் மாறினான். கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரியே நான்

ஏழையாய் இருக்கிறேன் என்று நினைக்காதே, நீ பரலோகத்தில் ஐசுவரியவான். உங்கள் கவலைகள், துக்கங்கள், குடும்பத்தில் உள்ள குழப்பங்களுக்கெல்லாம் ஒரே காரணம் நாம் ஒன்றுமில்லாதவனாய் இருக்கிறேனே, நான் எப்படி என் குடும்பத்தை காப்பாற்றுவேன், நான் எப்படி என் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பேன், நான் எப்படி இந்த பூமியில் மற்றவர்களை போல வாழ்வேன் என்ற மனக்கவலை உங்களில் பலருக்கு இருக்கிறதை என்னால் உணரமுடிகிறது.

நமது முற்பிதாவாகிய ஆபிரகாமை பாருங்கள், தேவன் அவனை அழைத்தார். அவனோ எதையும் பேசாமல் தேவ சித்தத்துக்கு ஒப்பு கொடுத்து அவன் போகும் இடம் இன்னதென்று அறியாமல் போனான் ஆகையால் அவனை சீமானாக்கினார் (ஆதி 14:22). ஆனால் அவன் அந்த ஐசுவரியத்தை நம்பவில்லை ஐசுவரியத்தை கொடுக்கவும் எடுக்கவும் வல்லமையுள்ள தேவனை விசுவாசித்தான். சகலமும் அவர் கொடுத்தது என்று அவரையே மகிமைப்படுத்துகிறவனாக இருந்தான் ஈசாக்கையும் தேவன் ஐசுவரியவானாக்கினார் (ஆதி 26:13).அவன் ஐசுவரியவானாகி வ்ரவர விருத்தியடைந்து மகா பெரியவனானான், ஆனாலும் தன் ஐசுவரியத்தினாலே அவன் பெருமை பட்டுக்கொள்ளவில்லை அதை ஒரு பொருட்டாகவும் எண்ணவில்லை. இவைகள் நாம் மரிக்கும் போதுகூட வராது. நம் ஐசுவரியம் நம் தேவனே .இதை தாவீது தனது சங்கீதத்தில், கர்த்தாவே நீரே என் பங்கு என்கிறார் ( சங் 119:57).

நாம் இவ்வுலக ஐசுவரியத்தை நாடாமல் பரலோக ஐசுவரியமாகிய தேவன் மேல் நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தால் அந்த ஐசுவரியம் அழியாததும் நித்தியமானதுமாய் இருக்கும். அழிந்து போகிற செல்வத்தை தேடுவதை பார்க்கிலும் அழியாத செல்வமாகிய தேவனை தேடுவோம். அவர் நமக்கு ஏற்ற காலத்தில் சகலமும் செய்வார். யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை, // எல்லோருக்கும் கர்த்தரானவர் தம்மைத்தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம் பன்னராயிருக் கிறார் (ரோமர் 10:12). நாம் ஜீவனுள்ள தேவனை தொழுது கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம், அப்படி தொழுது கொள்ளும் ஒவ்வொருவருக்கும் அவரே ஐசுவரிய சம்பண்ணராயிருக்கிறார்.

இதை ருசி பார்த்த அப்போஸ்தலன் பவுல் கொலோசே சபைக்கு எழுதும் போது "கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்" கொலோ 3 : 1-2. தேவனுடைய வலது பாரிசத்தில் மேலானவைகளை தேடும்படி கூறுகிறார். நம் தேவன் நித்தியமானவர் அவர் அளிப்பதும் நித்தியமானதே, அழிவுள்ளதல்ல ஆகையால் பிரியமானவர்களே நீங்கள் பூமியில் உள்ள அழிவை தேடாமல் அழியாத நித்திய ஐசுவரியங்களை தேடுங்கள். அதன் மூலம் உங்களை தேவன் ஆசீர்வதித்து காத்து வழி நடத்துவாராக.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" பிலிப்.4:19.

# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 16

D. எபிநேசர்

**யோனத்தான் :** போன தடவை கிறிஸ்தவ நாடுகளில் கலவரம் நடப்பதில்லையான்னு கேட்டிருந்தேன் தாவீது.

**தாவீது :** ஞாபகமிருக்கு மிக முக்கியமான கேள்வியாச்சே! பதில் தெரிஞ்சுக்கிறதுக்கு முன்னாடி, கிறிஸ்துவங்கன்னா யாருன்னு முதல்ல தெரிஞ்சுக்க ணும்.

**யோனத்தான் :** ஏம்பா, இது கூடவா தெரியாது? வீடு முழுவதும் வசனம் எழுதி வச்சிருப்பாங்க, சிலுவை போட்டிருப்பாங்க. இயேசு, மரியாள் படம் தொங்கவிட்டிருப்பாங்க, பொட்டு வச்சிருக்கமாட்டாங்க. கொஞ்சம் தீவிரமானவங்கன்னா வெள்ளை ஜிப்பா போட்டிருப்பாங்க. பெண்கள் வெள்ளைச் சேலை கட்டியிருப்பாங்க. கழுத்தில, காதுல, மூக்குல, எதுவும் போட்டுக்க மாட்டாங்க. இந்த அடையாளங்கள் இல்லேன்னாக்கூட அவங்க பேரைக் கேட்டா தெரிஞ்சுடப்போகுது. பீட்டர்னா, கிறிஸ்டின், பெருமாள்னா இந்து, பீர்முகமதுன்னா முஸ்லீம், அவ்வளவுதான்.

**தாவீது :** இப்படிதான் பெரும்பாலும் நெனைச்சிக்கிட்டுருக்காங்க. ஒருவனுடைய பேரை வச்சோ தோற்றத்தை வச்சோ கிறிஸ்தவன்னு தீர்மானிக்க முடியாது. இப்படிப்பட்ட வங்களப்பத்தி இயேசு என்ன சொல்றாருன்னு பாரு (மத்தேயு 15:8,9.)

**யோனத்தான் :** இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனையை உபதேசங்க்ளாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.

**தாவீது :** ஆண்டவர் அவர்களை தன்னுடையவர்களாக ஏற்றுக் கொள்கிறதில்லை என்பதும், அவர்கள் தேவனுடைய இராஜ்யத்துக்குரியவர்களல்ல என்பதும் தெளிவாகத் தெரிகிறது. (மத் 7:21 - 27).

**யோனத்தான் :** அப்படின்னா அந்த நாடுகளில் இருப்பவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் இல்லையா?

**தாவீது :** கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடக்கிற யாரும் கிறிஸ்தவர்களல்ல. அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பவர்களே அவருடையவர்கள் (11 யோவான் 9). அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்கிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்(1 யோவான் 2:6) உண்மையான கிறிஸ்தவர்களும் உலக முழுவதும் இருக்கிறார்கள், அவர்களை எப்படி அடையாளம் காண வேண்டும் என்றால், அவர்களுடைய கனிகளினால் அறிவீர்கள் என்று சொல்கிறார்( மத்தேயு 7:16). கனிகள் என்று அவர் குறிப்பிடுவது மிகச் சிறந்த குணாதிசயங்கள். (கலா 5: 22-24). இதன்படியே ஆண்டவர் வாழ்ந்தார். இதன்படி அவரைப் பின்பற்றுபவனே கிறிஸ்தவர்கள். அப்படிபட்டவர்கள் நிறைந்த தேசம் நிச்சயம் அமைதியான தேசமாக இருக்கும் இல்லையா?

**யோனத்தான் :** இப்போது அது போன்ற தேசம் உலகத்தில் இருக்கிறதா?

**தாவீது :** இல்லை, என்றாலும் அவருடைய அரசாங்கம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது எதுவென்று கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த முறை பார்ப்போம்.

(மீண்டும் சந்திப்போம்)

**பொருள்** : வெட்டுக்கிளிகளின் கொள்ளையினால் ஏற்பட்ட அழிவிலிருந்து மனந்திரும்புதலின் மூலம் விடுதலை

**ஆக்கியோன்** : யோவேல்

**காலம்** : 835 - 500 கி.மு இருக்கலாம் எனகருதப்படுகிறது.

**திட்ட வரைக் குறிப்பு** :

- ★ யோவேல் வெளிப்படுத்துகிறது: கர்த்தருடைய நாள் கர்த்தருடைய சபையை மனந்திருந்தி அவருக்குச் சாட்சியாக இருக்க அழைக்கிறது (1:1 2:7)
- ★ கர்த்தர் இரக்கத்தினால் தம்முடைய ஜனங்களின் தேவைகளைச் சந்தித்து அவர்களை உண்மையான ஆராதனைக்கு நேராக வழிநடத்துகிறார் (2:18 27)
- ★ கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு இரட்சிப்பின் நாளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார் (2:28 3:21)

**சிறப்புச் செய்தி :** *நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சிப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்..... என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை"*

**வரலாற்று பின்னணி :** *கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை மீட்டு, தேசங்களை நியாயந்தீர்ப்பதற்காக, அவர்கள் மனந்திருப்பவேண்டுமென்று அழைப்பு விடுக்கும்படி அறிவுறுத்துதல்.*

# ஜெபியுங்கள்

- ★ வாசகர் கருத்தரங்கின் மூலம் இதுவரை பன்னிரெண்டு மாவட்டங்களை சந்திக்க கிருபை செய்த தேவனை துதித்து .....
- ★ கர்த்தர் கம்ப்யூட்டர் வாங்க அநுக்கிரகம் செய்தபடியால் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி ........
- ★ பத்திரிக்கை வளர்ச்சிக்காக உதவி செய்கிற அனைத்து தேவ பிள்ளைகளுக்காக......
- ★ கர்த்தருக்குள் மரித்த நமது பத்திரிகை வாசகி மேரியம்மாளுடைய குடும்ப ஆறுதலுக்காக....
- ★ சுகவீனமாயிருக்கும் வாசகர்களுக்காக.......

## வேத அறிவுப்போட்டி எண் 39ன் விடைகள்

1. யோனா — யோனா 4:2
2. அறுப்பு அறுங்கள் — ஓசியா 10:12
3. தரியு — தானி 6:18
4. செம்மையாயிருக்கும் — நீதி. 12: 15
5. யோபு — யோபு 12:7
6. வசனத்தை மாற் 16:20
7. மறைபொருளுமில்லை லூக் 8:17
8. பவுல் — அப். 28:30
9. ஏசாயா, இஸ்ரவேலரைக் — ரோ. 9:28
10 கிறிஸ்துவின். — 2கொ. 5: 10

## வேத அறிவுப்போட்டி எண் 39ல் வெற்றிபெற்றவர்கள்

P. அலிஸ் மேரியம்மாள் - வத்தலக்குண்டு
N. ஆசா - மதுரை
N. ஷீலாநான்சி - மதுரை
Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
P. மகாலிங்கம் - மதுரை
Mrs. ஜாஸ்மின் வின்சென்ட் ராஜ் - மதுரை
V. சரவணக்குமார் -கோவை
S. ஆனந்தராஜ் - ஈரோடு
S. ராஜுபிரசாத் - மதுரை
Mrs. லலிதா பிரேமகுமாரி - மதுரை
P. ஜெயராணி - நாகர்கோவில்
T. அந்தோணி -செட்டிபாளையம்
M. அருள்தாஸ் -செட்டிபாளையம்
G. சின்னத்துரை -செட்டிபாளையம்
P. சேவியர் ராஜா -செட்டிபாளையம்
V. சிவக்குமார் -செட்டிபாளையம்
N. இம்மானுவேல் ராஜ் -செட்டிபாளையம்
R. பிளசன் -செட்டிபாளையம்
C.சுந்தரகொடி -செட்டிபாளையம்
R. கலாவதி ராஜா -P.சத்திரப்பட்டி
G. ஏசையன்ராஜ் -கோபி
Mrs. வனிதாசாமுவேல் - —
S. அறிவழகன் -செட்டிபாளையம்
J.S. நிர்மலாஜான் -மதுரை
N.பொன்னி -மதுரை
G. மெர்சிரூபி -கொடுவாய்
A. சேவியர்மேரி -கோபி
X. எஸ்தர்சேகர் -கோபி
S. தானியேல் விஸ்வநாத் -செட்டிபாளையம்
C. பிரவின் -செட்டிபாளையம்
S. செல்லமணி ஆறுமுகம் -Y. ஒத்தக்கடை
D. சமாதான ராஜா -செட்டிபாளையம்
N. ஜேம்ஸ் -செட்டிபாளையம்
Mrs. குளோரி பவுல்சர் -சென்னை
T. வேலுச்சாமி -ஜோடர்பாளையம்
Dr. ஜெயசிங் -சென்னை
S. தினேஷ்குமார் -திடுமல்
S.R. பெரியசாமி -சேனூர்
S. விஜயா -திடுமல்
R. செந்தில் குமார் -திடுமல்
S. புவனேஸ்வரி -திடுமல்
A. தங்கமுத்து -பொங்கலூர்
M. ரோஸ்மேரி -சென்னை
V. கோவலன் -மதுரை
M. கமலவேணி கன்னையன் -சென்னை
A. ஜோதி காந்தம் -பாண்டியநல்லூர்
R. சாமுவேல் -ஊதியூர்
P.M. சத்தியவாசகன் -பணமரத்துப்பட்டி
S. தண்டபாணி -சிலுவத்தூர்
K. தங்கவேல் -சமுத்திரவலசு
M. சுரேஷ் -சென்னை
P. கந்தசாமி -கீரனூர்
எஸ்தர்ஹென்றி -கேத்தி
Mrs. எஸ்தர்மேரிமோகன் -கேத்தி
புனிதா சரவணன் - பெருங்காஞ்சி
S. சரவணபவன் - பெருங்காஞ்சி
அகிலா சுந்தரம் - நங்கவள்ளி
S. கமாட்சி - சமத்துவபுரம்
K. சாந்தி -M. வாடிப்பட்டி
M. சுரேஷ் -கொடுவாய்
Mrs. மரகதம் ராஜேஸ்வரி -கோம்பை
A. கந்தசாமி -தெக்கலூர்
A. ராபர்ட் கிளைவ் -சில்லாங்

### கர்த்தருடைய வேதம்

"கர்த்தருடைய வேதம்
குறைவற்றதும், ஆத்துமாவை
உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது;
கர்த்தருடைய சாட்சி சத்தியமும்,
பேதையை
ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.
கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும்,
இருதயத்தைச்
சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது;
கர்த்தருடைய கற்பனை தூய்மையும்,
கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.
கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும்,
என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது;
கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும்,
அவைகள் அனைத்தும்
நீதியுமாயிருக்கிறது.
அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்
பொன்னிலும் விரும்பப் பட தக்கதும்,
தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும்
தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய்
இருக்கிறது.
அன்றியும் அவைகளால் உமது அடியேன்
எச்சரிக்கப்படுகிறேன், அவைகளைக்
கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன்
உண்டு" சங்கீதம் 19: 7 11

## ஒருவழி (தபால்வழி பாடத்திட்டம்)

### MASTER COURSE

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்று நீங்கள் இரட்சிக்கப்பட அருமையான பாடத்திட்டம் இது. இப்பயிற்சியில் சேர்ந்து படிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| சேர்க்கை கட்டணம் | : | ரூபாய் 30 (தபால் செலவுக்காக) |
| வயது | : | 20க்கு மேல் |
| ஆண்டுகள் | : | இரண்டுவருடம் |
| பாடத்திட்டம் | : | ஆறு பகுதிகள் |
| மொழி | : | தமிழ் |

ஆறு பகுதிகளை முடிப்பவர்களுக்கு இறுதிச் சான்றிதழ் MASTER COURSE CERTIFICATE" வழங்கப்படும். இன்றே ரூபாய் 30 செலுத்தி உங்களை பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள். ஜனவரி 2004ல் இப்பாடத்திட்டம் உங்கள் வீடு தேடி வரும்.

*குறிப்பு:*

உங்கள் முகவரியை ஆங்கிலத்தில் மாவட்டம், பின்கோடு உள்பட தெளிவாக எழுதி அனுப்பவும்.

**BATLAGUNDU BIBLE COLLEGE**
Post Box No: 5
Batlagundu - 624 202 South India


## அந்திப்பத்திரி — தெரிந்து கொள்ளுங்கள்

*இப்பொழுது இந்த ஊர் "ராஸ் -எல்-அய்ன்"* (Ras-El-Ain) *என்று அழைக்கப்படுகிறது. எருசேலம் நெடும்பாதையில் 42 மைல் தூரத்தில் ஒரு உயரமான குன்றின்மேல் இவ்வூர் அமைந்திருக்கிறது. அந்தப் பாதை தொன்மையான காலங்களில் செசரியாவின் கடல்வழி தலைநகரம் வரை சென்றது. இவ்வூரில் மகாஏரோது "அவுஜா"* (Auja River) *என்ற நதி ஆரம்பமாகும் இடத்தில் தன்னுடைய தகப்பன் "அந்தி பேத்தர்"* (Anti pater) *என்பவரை கனம் பண்ணும்படி ஒரு ரம்மியமான ஸ்தலத்தை பிரயாணிகள் இளைப்பாறுவதற்காக கட்டினான்.*

*அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வூர் வழியாக அனுப்பப்பட்ட பொழுது இருநூறு காலாட்களும், எழுபது குதிரைவீரரும் அவருடன் சென்றார்கள். அந்திப்பத்திரியிலே சற்று ஓய்வெடுத்த பின்பு காலாட்கள் பவுலை பிரிந்தார்கள். அங்கிருந்து 26 மைல் தொலைவிலிருந்து செசரியாவுக்கு குதிரை வீரர்கள்பவுலோடு கூட சென்றானர் (அப். 23:23-33) எருசலேமிலிருந்து செசரியாவுக்குச் செல்லும் பிரதானமான ரோமாபுரிச் சாலையில் சிலபகுதிகள் அந்திப்பத்திரியின் அருகே இன்றைக்கும் மூடப்படாமல் இருக்கின்றன.*

K.R.K. ரவிஆசீர்

# வேத அறிவுப் போட்டி எண். 40

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். 25 பைசா தபால் கார்டை தவிர்க்கவும்.

**Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.**

1. என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், யார் எனக்கு வெளிச்சமாயிருப்பார்?
2. கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொண்டு, அது தமக்கு எதாகும்படி விரும்பினார்?
3. கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள் மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன், கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார் என்ற தீர்க்கதரிசி யார்.?
4. என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப் பண்ணும்போது, என்னை யார் என்று அறிந்து கொள்வீர்கள்?
5. நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்கு என்னவாயிருப்பீர்கள்?
6. வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்த சேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் யாருக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்?
7. சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள்பின்பற்றினவர்களாகி, அவர்கள்யூதராலே எப்படிப்பாடு பட்டார்களோ, அப்படியே நீங்களும் எந்த ஜனங்களாலே பாடுபட்டீர்கள்?
8. உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் என்ன செய்யக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் என்ன செய்யக்கடவன்?
9. சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜனமுண்டாகட்டும்; கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும் என்று யார் யாருக்கு எழுதுவது?
10. ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதா தேசத்திலே வைத்து, அவர்களுக்கு அந்நாளிலே திராட்சத் தோட்டங்களையும் வயல் நிலங்களையும் கொடுத்தவன் யார்?

## நடப்புச் செய்திகள்

★ மிகப் பெரிய தாக்குதல் நடத்த அல்கொய்தா இயக்கம் சதி திட்டம் தீட்டி உள்ளது. எனவே உலக நாடுகள் உஷாரக இருக்க வேண்டும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

★ தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தை திட்டம் செயல் படுத்தப்படுவதால் பெண்சிசு கொலை மிகவும் குறைந்து விட்டது என்று அமைச்சர் வளர்மதி கூறியுள்ளார்.

★ இந்தியாவுக்கான அமெரிக்க புதிய தூதராக டேவிட்கேம்பல் முல் போர்டு என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ பத்திரிக்கையாளர் பிரச்சினை பற்றி பிரதமர் வாஜ்பாய் கருத்து தெரிவிக்கையில் 'யாரும் வரம்பை மீறக் கூடாது' என்று கருத்து தெரிவித்துள்ளார்.

★ உலகின் வேகமான 3 வது சூப்பர் கம்ப்யூட்டரை 3 மாத காலத்தில், இந்தியரான ஸ்ரீநிதி வரதராஜன் உருவாக்கி இருக்கிறார்.

நன்றி தினந்தந்தி

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. Editor : B. Arjunan.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7. ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து. அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| PAITE | Sunday | 8.00 p.m<br>8.15 p.m | Box. 56<br>Manipur - 795 128 | KAMLIAN PAO |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th December 2003.

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.